போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

I-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

SEPTEMBER 25, 1928.

ந. 38.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1928-ம்௵ ஸெப்டெம்பர்௴ 25௳. [PRICE, 1 *anna*.

கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

லா (ஜெனரல்) டிபார்ட்மெண்ட்.

விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1928-ம்௵
ஸெப்டெம்பர்௴ 12௳.

நெ. 711.—(1914-ம்௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம்௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படியும் (2) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (g), (h) அடையாளமிட்ட பகுதிகளின்படியும் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - 1928-ம்௵ மார்ச்௴ 6௳யுள்ள **போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்** I-ம் பாகத்தின் 383-வது பக்கத்திலே (இங்க்லிஷில்) பிரசித்தம் செய்யப்பட்டுள்ள லா டிபார்ட்மெண்டில் பிறந்த 184-ம் நெ. விளம்பரத்தில் அறிக்கையிடப்பட்டிருக்கும் விதியை ரத்துசெய்து அதற்குப் பர்த்தியாக, நீலகிரி ஜில்லாவில் [(ghaut) காட் ரோடுகளிலே] கணவாய் பாட்டைகளிலே மோடார் லாரி என்னும் வண்டிகள் ஓட்டுவது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காக அடியிற்கண்ட விதியைக் கனிகூர்ந்து வெளிவிடுகிறார்கள் :—

விதி.

நீலகிரி ஜில்லாவிலுள்ள யாதொரு கணவாய் பாட்டையில் எந்த மோடார் லாரியையும்; மணி ஒன்றுக்கு பன்னிரண்டு மைலுக்குப் மேற்பட்ட வேகத்துடன் ஓட்டக்கூடாது.

இந்த விதியில், 'மோர்டார் லாரி' என்பது - சாமான்களை ஏற்றிக்கொண்டு போவதற்காக சாதாரணமாய் உபயோகிக்கப்படும் மோடார் வண்டி என்று அர்த்தமாகும் ; மேலும், 'கணவாய் பாட்டை' என்பது-யாதொரு பாட்டை கணவாய் பாட்டையாகுமென்று அது ஆரம்பிக்கிற இடத்திலும் முடிகிற இடத்திலும் விளம்பரப்பலகைகள் அமைத்து நீலகிரி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டால் அறிக்கையிடப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட பாட்டையென்று அர்த்தமாகும்.

ஜி. எஸ். பாஸ்மன்,
கவர்ன்மெண்ட் ஆக்டிங் ஸெக்ரெடரி.

டெவெலப்மெண்ட் டிபார்ட்மெண்ட்.

விளம்பரங்கள்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1928-ம்௵
ஆகஸ்ட்௴ 2௳ (1261-ம் ந. கவர்ன்மெண்ட் உத்தரவு).

நெ. 228.—தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம்௵த்திய ஆக்டில் அன்றாட இளைப்பாறும் கால அளவு (பிரிவு 21), வாராந்த விடுமுறை தினம் (பிரிவு 22), அறுபது மணிநேரம் வேலை செய்யும் வாரம் (பிரிவு 27), பதினொரு மணிநேரம் வேலை செய்யும் தினம் (பிரிவு 28) ஆகிய இவைகள் சம்பந்தமாய்க் கண்டிருக்கும் நிபந்தனைகளினின்றும் நிவாரணை செய்துகொடுத்து **போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்** I-ம் பாகத்தில் பிரசித்தம் செய்திருக்கும் அடியில் குறிப்பிட்டுள்ள விளம்பரங்களை ரத்து

செய்து அவைகளுக்குப் பர்த்தியாக, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - பிற்பட்டு திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை ஆக்ட் 30-வது, 32-வது, 30-A பிரிவுகளின்படி அடியிற்கண்ட திருத்தப்பட்ட விளம்பரங்களை வெளிவிட உத்தேசிக்கிறார்கள். தொழிற்சாலைகளைக் கையாளுகிறவர்களாவது அவைகளின் மானேஜர்களாவது ஷை விளம்பரங்கள் விஷயமாய் எவையேனும் அபிப்பிராயக் குறிப்புகள் தெரிவிக்க விரும்பும்பட்சத்தில், அவர்கள் - தங்கள் குறிப்புகளை 1928-ம்௵ அக்டோபர்௴ 1௳யன்றைக்காவது அதற்கு முன்பாவது லேபர் கம்மிஷனர் மூலமாய் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பவேண்டும் :—

நம்பர்.	பக்கம்.	தேதி.
275	1147	1923-ம்௵ அக்டோபர்௴ 9௳.
317	1400	1923-ம்௵ டிஸெம்பர்௴ 11௳.
318	1400	ஷை.
319	1401	ஷை.
320	1401	ஷை.
321	1401	ஷை.
88	256	1924-ம்௵ மார்ச்௴ 11௳.
153	847	1926-ம்௵ எப்ரல்௴ 27௳.
322	1401	1923-ம்௵ டிஸெம்பர்௴ 11௳.
323	1401	ஷை.
210	775	1924-ம்௵ ஜூலை௴ 8௳.
253	1018	1924-ம்௵ ஆகஸ்ட்௴ 26௳.
26	201	1925-ம்௵ ஜனவரி௴ 27௳.
123	805	1925-ம்௵ எப்ரல்௴ 28௳.
150	1013	1925-ம்௵ ஜூன்௴ 9௳.
312	2130	1925-ம்௵ நவம்பர்௴ 3௳.

I-ம் ந. விளம்பரம்.

அடியிற்கண்ட வகுப்புகளைச் சேர்ந்த வேலையானது சகல தொழிற்சாலைகளிலும் பூர்வாங்கமானதாய்ச் செய்யும் அல்லது பூர்த்திசெய்யும் தன்மையுடையதாயிருப்பதாகவும், பொதுவாக அந்த தொழிற்சாலைகளின் வேலை நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஹத்துக்களுக்கு வெளியில் அவசியம் செய்யப்படவேண்டியிருப்பதாகவும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்குத் திருப்திகரமாய் ருஜூ செய்யப்பட்டிருக்கிறபடியால்,

பிற்பட்டு திருத்தப்பட்டபடிக்குள்ள (1911-ம்௵த்து 12-வது ஆக்டாகிய) இந்துதேசத்து தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம்௵த்திய ஆக்ட் 30-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (a) அடையாளமிட்ட பகுதியின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - ஷை தொழிற்சாலைகளில் மேலேகண்ட வகுப்புகளைச் சேர்ந்த வேலையை பின்வரும் திட்டங்களுக்கு உட்பட்டு ஷை ஆக்ட் 27-வது, 28-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளினின்றும் இதனால் விலக்கி நிவாரணை செய்கிறார்கள் :—

நிவாரணை செய்யப்பட்ட வேலை.

(1) யந்திரங்கள் சம்பந்தமான வேலை நடக்கும் பட்டடை, கம்மியசாலை அல்லது வார்ப்படசாலையிலாவது, மில் கியரிங், மின்சாரத்தைக் கொண்டு ஓட்டப்படும் உபகரணங்கள் அல்லது மின்சார விளக்குகளுக்குரிய உபகரணங்கள், யந்திர சக்தியைக் கொண்டாகிலும் மின்சார சக்தியைக்கொண்டாகிலும் வேலைசெய்யப்படும் லிப்ட் (lift) என்னும் ஆள்களையும் சாமான்களையும் உயரத் தூக்கும் சாதனங்கள், அல்லது நீராவி அல்லது தண்ணீர்க குழாயகள் அல்லது பம்புகள் சம்பந்தமாகவாவது செய்யப்படும் வேலை.

(2) எவையேனும் யந்திரங்களையாவது தொழிற்சாலையில் வேலை நடத்துவதற்கு அவசியமாயுள்ள வேறே எந்த வஸ்துவையாவது பரிசோதித்துப் பார்ப்பதில் அல்லது பழுது பார்ப்பதில் நடத்தப்படும் வேலை.

விவரணம்.— நிஷ்கரிஷையான காலத்துக்கு ஒருமுறை-சுத்தம் செய்வது என்பது 'பரிசோதித்துப் பார்ப்பது' அல்லது 'பழுது பார்ப்பது' என்னும் சொற்றொடர்களில் அடங்காது.

நிவாரணை சம்பந்தமான திட்டங்கள்.

(a) லேபர் கம்மிஷனரால் நிஷ்கரிஷை செய்யப்படும் குறித்த ஒரு சங்கியையுள்ள நபர்களின் விஷயத்தில் மாத்திரமே நிவாரணை செய்வதற்கு அனுமதி கொடுக்கப்படும். இந்த நிவாரணையினால் பலன் அடைய விரும்பும் தொழிற்சாலைகளின் மானேஜர்களாவது அவைகளைக் கையாளுகிறவர்களாவது - முறையே தங்கள் தங்கள் தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டர்கள் மூலமாக லேபர் கம்மிஷனருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்.

(b) விசேஷ சந்தர்ப்பங்களில் தவிர மற்றப்படி, யாதொரு தொழிற்சாலையில் எந்த நபராகிலும் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கு அதிகமாய் எவ்வளவு காலத்துக்கு வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுகிறாரோ அந்தக் காலமானது- ஏதாவதொரு தினத்தில் வேலை செய்யும் மணிநேரம் பன்னிரண்டு மணிக்கு மேற்படும்படி செய்யக்கூடியதாயிருக்கக்கூடாது. மேலும், அது - எந்த விஷயத்திலும் ஏதாவதொரு வாரத்தில் வேலை செய்யும் மணிநேரம் அறுபத்தாறு மணிக்கு மேற்படும்படி செய்யக்கூடியதாயிருக்கக்கூடாது. ஷை விசேஷ சந்தர்ப்பங்களைக் குறித்த விவரங்களை உடனே இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும்.

II-ம் ந. விளம்பரம்.

இதனுடன் சேர்த்திருக்கும் ஷெட்யூலின் (1) குறிப்பிட்ட கலத்தில் கண்ட வகுப்புகளைச் சேர்ந்த வேலையாள்களின் வேலையானது முக்கியமாய் விட்டுவிட்டு செய்யப்படுவதாகுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்குத் திருப்திகரமாய் ருஜூ செய்யப்பட்டிருக்கிறபடியால்,

பிற்பட்டு திருத்தப்பட்டபடிக்குள்ள (1911-ம்௵த்து 12-வது ஆக்டாகிய) இந்துதேசத்து தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம்௵த்திய ஆக்ட் 30-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (b) அடையாளமிட்ட பகுதியின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - ஷை வகுப்புகளைச் சேர்ந்த வேலையாள்களின் வேலையை, (2) குறிப்பிட்ட கலத்தில் குறிப்பிட்டிருக்கும் ஷை ஆக்டின் நிபந்தனைகளினின்றும் அதன் (3) குறிப்பிட்ட கலத்தில் கண்டிருக்கும் திட்டங்களுக்கு உட்பட்டும் இதனால் விலக்கி நிவாரணை செய்கிறார்கள்:—

ஷெட்யூல்.

வேலையின் வரிசைக்கிரமமான நம்பரும் பெயரும். (1)	இன்ன நிபந்தனையினின்றும் நிவாரணை செய்து கொடுத்திருக்கிறதென்பது. (2)	இன்ன திட்டங்களுக்கு உட்பட்டு நிவாரணை செய்திருக்கிறதென்பது. (3)
1. ராணுவ புல் பண்ணையைச் சேர்ந்த குறித்த பருவங்களில் ஆடுமாடுகளின் தீனியை அழுத்தும் தொழிற்சாலைகளிலுள்ள நபர்களின் வேலை.	22 (1) (b)	வேலை செய்யும் தினத்துக்குப் பர்த்தியாக ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் விடுமுறை தினம் என்றைக்கு வருமோ அதற்கு மேற்படாமல் முன்னதாக, அந்தப்படி பர்த்தியாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட விடுமுறை தினத்தைக் குறித்து இன்ஸ்பெக்டருக்கு நோடிஸ் அனுப்பவேண்டும்.
2. (a) எண்ணெய் யந்திரஸ்தாபனங்களில் பம்ப் அடிக்கும் வேலை சம்பந்தமாய்ப் புருஷர்கள் செய்யும் வேலை.	22 ...	ஒரு முழு தினத்துக்கு விடுமுறை இல்லாமல் தொடர்ச்சியாய்ப் பதினைன்கு தினம் எந்த நபரையும் வேலை செய்யவிடக்கூடாது.
(b) ஷை ஷை	27, 28 ...	விசேஷ சந்தர்ப்பங்களில் தவிர மற்றப்படி, யாதொரு தொழிற்சாலையில் எந்த நபராகிலும் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கு அதிகமாய் எவ்வளவு காலத்துக்கு வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுகிறாரோ அந்தக் காலமானது - ஏதாவதொரு தினத்தில் வேலை செய்யும் மணிநேரம் பன்னிரண்டு மணிநேரத்துக்கு மேற்படும்படி செய்யக்கூடியதாயிருக்கக்கூடாது. மேலும், அது - எந்த விஷயத்திலும், ஏதாவதொரு வாரத்தில் வேலை செய்யும் மணிநேரம் அறுபத்தாறு மணிக்கு மேற்படும்படி செய்யக்கூடியதா யிருக்கக்கூடாது. ஷை விசேஷ சந்தர்ப்பங்களைக் குறித்த விவரங்களை இன்ஸ்பெக்டருக்கு உடனே தெரிவிக்கவேண்டும்.
(c) கப்பலில் இருக்கும் எண்ணெய் (tank) டாங்குகளிலிருந்தாவது அவைகளுக்காவது எண்ணெயைப் பம்ப் அடிப்பது சம்பந்தமாய் எண்ணெய் ஸ்டேஷன்களிலே பம்ப் செய்யும் வேலைகளில் அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கும் புருஷர்கள் செய்யும் வேலை.	21 ...	(1) லேபர் கம்மிஷனரால் நிஷ்கரிஷை செய்யப்படும் குறித்த ஒரு சங்கியையுள்ள நபர்களின் விஷயத்தில் மாத்திரமே இந்த நிவாரணை செய்துகொடுக்க அனுமதி கொடுக்கப்படும். இந்த நிவாரணையினால் பலன் அடைய விரும்பும் தொழிற்சாலைகளின் மானேஜர்கள் அல்லது கையாளுகிறவர்கள் - முறையே தங்கள் தங்கள் தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டர்கள் மூலமாய் லேபர் கம்மிஷனருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். (2) போஜனத்துக்காக (நிஷ்கரிஷையான ஒரு கால அளவாயிராவிட்டாலும்) இன்ஸ்பெக்டருக்குத் திருப்திகரமாயிருக்கும்படி போதுமான காலம்விடவேண்டும்.
3. (1) யந்திரங்களுக்கு எண்ணெய் போடும் அல்லது யந்திரங்களுக்கு எண்ணெய் போடுவதில் உதவிசெய்யும் வேலையிலும், (2) தொழிற்சாலைக் கட்டிடங்களின் சுவர்கள், மச்சு அல்லது இதர பாகங்களையும், டாங்குகளையும், கிணறுகளையும், ஈரமாக்கும் அல்லது காற்று வருவாய் உண்டாக்கும் உபகரணங்களையும், டன்னெல்களையும், அல்லது பஞ்சிலிருந்து விதையெடுக்கும் தொழிற்சாலைகளிலுள்ள (blow room) ப்ளோ ரூம் என்னும் அறைகளைச் சேர்ந்த புகை போக்கிகள், லைன் ஷாப்ட் ஆலிகள் அல்லது (gallery) காலெரிகளையும் சுத்தம் செய்யும் வேலையிலும் அமர்ந்திருக்கும் புருஷர்களின் வேலை.	22, 27, 28 ...	(1) லேபர் கம்மிஷனரால் நிஷ்கரிஷை செய்யப்படும் குறித்த ஒரு சங்கியையுள்ள நபர்களின் விஷயத்தில் மாத்திரமே இந்த நிவாரணை செய்துகொடுக்க அனுமதி கொடுக்கப்படும். இந்த நிவாரணையினால் பலன் அடைய விரும்பும் தொழிற்சாலைகளின் மானேஜர்கள் அல்லது கையாளுகிறவர்கள்-முறையே தங்கள் தங்கள் தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டர்கள் மூலமாய் லேபர் கம்மிஷனருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். (2) வேலை நடந்துகொண்டிருக்கும்போது யந்திரங்களை ஓட்டுவதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது. (3) ஒரு முழு தினத்துக்கு விடுமுறையில்லாமல் தொடர்ச்சியாய்ப் பதினைன்கு தினம் எந்த நபரையும் வேலை செய்யவிடக்கூடாது. (4) விசேஷ சந்தர்ப்பங்களில் தவிர மற்றப்படி யாதொரு தொழிற்சாலையில் எந்த நபராகிலும் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கு அதிகமாய் எவ்வளவு காலத்துக்கு வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுகிறாரோ அந்தக் காலமானது - ஏதாவதொரு தினத்தில் வேலைசெய்யும் மணிநேரம் பன்னிரண்டு மணிநேரத்துக்கு மேற்படும்படி செய்யக்கூடியதா யிருக்கக்கூடாது; மேலும், அது - எந்த விஷயத்திலும் ஏதாவதொரு வாரத்தில் வேலை செய்யும் மணிநேரம் அறுபத்தாறு மணிக்கு மேற்படும்படி செய்யக்கூடியதா யிருக்கக்கூடாது. ஷை விசேஷசந்தர்ப்பங்களைக் குறித்த விவரங்களை இன்ஸ்பெக்டருக்கு உடனே தெரிவிக்கவேண்டும்.
4. மீன்களை உப்பிட்டு உலர்த்தும் முறைகளிலும் மீன்களை டப்பிகளில் அடைக்கும் முறைகளிலும் அமர்ந்திருக்கும் நபர்களின் வேலை.	22, 26 ...	22-வது பிரிவினின்றும் நிவாரணை செய்யப்படும் விஷயத்தில், ஒரு முழு தினத்துக்கு விடுமுறையில்லாமல் தொடர்ச்சியாய்ப் பதினைன்கு தினம் எந்த நபரையும் வேலை செய்யவிடக்கூடாது.
5. அரிசி மில்லுகளில் நெல்லை ஊறவைப்பது, வேகவைப்பது, உலர்த்துவது, உமி நீக்குவது முதலிய காரியங்களுக்காக அமர்த்திக்கொள்ளப்படும் ஆள்களின் வேலை.	22 (1) (b), 26.	22-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (b) அடையாளமிட்ட பகுதியினின்றும் நிவாரணை செய்யப்படும் விஷயத்தில், வேலை செய்யும் தினத்துக்குப் பர்த்தியாக ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் விடுமுறை தினம் என்றைக்கு வருமோ அதற்கு மேற்படாமல் முன்னதாக, அந்தப்படி பர்த்தியாய் ஏற்படுத்திக்கொடுத்திருக்கும் விடுமுறை தினத்தைக் குறித்து இன்ஸ்பெக்டருக்கு நோடிஸ் அனுப்பவேண்டும்.

வேலையின் வரிசைக்கிரமமான நம்பரும் பெயரும்.	இன்ன நிபந்தனையினின்றும் நிவாரணை செய்து கொடுத்திருக்கிறதென்பது.	இன்ன திட்டங்களுக்கு உட்பட்டு நிவாரணை செய்திருக்கிறதென்பது.
(1)	(2)	(3)
6. (a) ரெயில்வே என்ஜின்களை ஓடிக்கொண்டிருக்கும்போது பழுதுபார்க்கும் நபர்களின் வேலை.	22 (1) (b) ..	வேலை செய்யும் தினத்துக்குப் பர்த்தியாக ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் விடுமுறை தினம் என்றைக்கு வருமோ அதற்கு மேற்படாமல் முன்னதாக, அந்தப்படி பர்த்தியாய் ஏற்படுத்திக்கொடுத்திருக்கும் விடுமுறை தினத்தைக்குறித்து இன்ஸ்பெக்டருக்கு நோடிஸ் அனுப்பவேண்டும்.
(b) ரெயில்வே என்ஜின்களை ஓடிக்கொண்டிருக்கும்போது பழுதுபார்க்கும் நபர்களின் வேலை.	21	(1) லேபர் கம்மிஷனரால் நிஷ்கரிஷை செய்யப்படும் குறித்த ஒரு சங்கியையுள்ள நபர்களின் விஷயத்தில் மாத்திரமே இந்த நிவாரணை செய்துகொடுக்க அனுமதி கொடுக்கப்படும். இந்த நிவாரணையினுல் பலன் அடைய விரும்பும் தொழிற்சாலைகளின் மானேஜர்கள் அல்லது கையாளுகிறவர்கள்-முறையே தங்கள் தங்கள் தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டர்கள் மூலமாய் லேபர் கம்மிஷனருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். (2) போஜனத்துக்காக (நிஷ்கரிஷையான ஒரு கால அளவாயிராவிட்டாலும்) இன்ஸ்பெக்டருக்குத் திருப்திகரமாயிருக்கும்படி போதுமான காலம் விடவேண்டும்.
7. செய்துமுடிக்கப்பட்ட சாமான்களைச் சிப்பங்களாக கட்டுவதில், கட்டுகளாக அமைப்பதில் அல்லது (bale) பேல்களாகக் கட்டுவதிலாவது வேலை செய்யப்பட்டிராத வஸ்துக்களையும் சரக்கையும் வரப்பெறுக்கொள்ளுவதிலும் அனுப்புவதிலுமாவது அமர்ந்திருக்கும் நபர்களின் வேலை.	22, 26 ..	22-வது பிரிவினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கும் விஷயத்திலே, ஒரு முழு தினத்துக்கு விடுமுறையில்லாமல் தொடர்ச்சியாய்ப் பதினுன்கு தினம் எந்த நபரையும் வேலை செய்யவிடக்கூடாது.

குறிப்பு.—இந்த நிவாரணையானது - சாமான்களைக் கொண்டுபோவதற்கு பேல்களாய்க் கட்டும் காரியத்துக்காக மாத்திரமே வேலை செய்துவரும் தொழிற்சாலைகளுக்குப் பிரயோகப்படமாட்டாது.

III-ம் ந. விளம்பரம்.

இதனுடன் சேர்த்திருக்கும் ஷெட்யூலின் (1) குறிப்பிட்ட கலத்தில் விவரிக்கப்பட்டுள்ள வகுப்புகளைச் சேர்ந்த தொழிற்சாலைகளில் அதன் (2) குறிப்பிட்ட கலத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் வகுப்புகளைச் சேர்ந்த வேலையின் விஷயத்திலே, சங்கேதமான காரணங்களுக்காக (யாதொன்றைத்) தொடர்ச்சியாய் உற்பத்தி செய்வது அவசியமாயிருக்கிறதென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்குத் திருப்திகரமாக ருஜு செய்யப்பட்டிருக்கிறபடியால்,

பிற்பட்டு திருத்தப்பட்டபடிக்குள்ள (1911-ம் ஹூத்து 12-வது ஆக்டாகிய) இந்துதேசத்து தொழிற்சாலைகளைக்குறித்த 1911-ம் ஹூத்து ஆக்ட் 30-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (c) அடையாளமிட்ட பகுதியின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - ஷை வகுப்புகளைச் சேர்ந்த தொழிற்சாலைகளில் மேலேகண்ட வேலையை, ஷை ஷெட்யூலின் (4) குறிப்பிட்ட கலத்தில் கண்ட திட்டங்களுக்கு உட்பட்டு அதன் (3) குறிப்பிட்ட கலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஷை ஆக்டின் பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளினின்றும் இதனுல் களிகூர்ந்து நிவாரணை செய்கிறார்கள் :—

ஷெட்யூல்.

இன்ன வகுப்பைச் சேர்ந்த தொழிற்சாலைகள் நிவாரணை செய்யப்பட்டிருக்கின்றனவென்பது.	வேலை இப்படிப்பட்டதென்பது.	இன்ன பிரிவினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கிறதென்பது.	திட்டம்.
(1)	(2)	(3)	(4)
1. சர்க்கரை செய்யும் தொழிற்சாலைகள்.	வடிகட்டுவது, க்ரிஸ்டல் என்னும் கட்டிகளாக்குவது, புளிக்கவைப்பது, காய்ச்சி வடிப்பது, கரும்பை நசுக்கிப் பிழிவது, சாற்றைக் சொதிக்கவைப்பது ஆகிய இவைகளில் அமர்ந்திருக்கும் நபர்களின் வேலை.	21, 22, 28.	21-வது பிரிவினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கும் விஷயத்திலே, போஜனத்துக்காக (நிஷ்கரிஷையான ஒரு கால அளவாயிராவிட்டாலும்) தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டருக்குத் திருப்திகரமாயிருக்கும்படி போதுமான காலம் விடவேண்டும்.
2. சாராய வகைகளைக் காய்ச்சி வடிக்கும் தொழிற்சாலைகள்.	காய்ச்சி வடிப்பதற்கான தளவாடங்களில் அமர்ந்திருக்கும் நபர்களின் வேலை.	22 ..	22-வது பிரிவினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கும் விஷயத்திலே, ஒரு முழு தினத்துக்கு விடுமுறையில்லாமல் தொடர்ச்சியாய்ப் பதினுன்கு தினம் எந்த நபரையும் வேலை செய்யவிடக்கூடாது.
3. ஓடுகள் செய்யும் தொழிற்சாலைகள்.	சூளைகளில் செங்கல்லையும் ஓட்டையும் சுடுவதில் அமர்ந்திருக்கும் நபர்களின் வேலை.	22 ..	

இன்ன வகுப்பைச் சேர்ந்த தொழிற்சாலைகள் நிவாரணை செய்யப்பட்டிருக்கின்றனவென்பது. (1)	வேலை இப்படிப்பட்டதென்பது. (2)	இன்ன பிரிவினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கிறதென்பது. (3)	திட்டம். (4)
4. காஸ் (gas) என்னும் வாயுவகைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள்.	காஸ் உற்பத்தி செய்வதிலேயே அமர்ந்திருக்கும் நபர்களின் வேலை.	22	
5. சந்தன தைலம் முதலிய ஆவியாய்ப் போகக் கூடிய எஸ்ஸென்ஷல் ஆயில் என்னும் தைல வகைகளை காய்ச்சி வடிக்கும் தொழிற்சாலைகள்.	ஸ்டில் என்னும் காயச்சி வடிப்பதற்கான அறைகளிலும் கண்டென்ஸிங் என்னும் திரவ ரூபத்துக்குக் கொண்டு வருவதற்கான அறைகளிலும் அமர்ந்திருக்கும் நபர்களின் வேலை.	22	21-வது பிரிவினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கும் விஷயத்திலே, போஜனத்துக்காக (நிஷ்கரிஷையான ஒரு கால அளவாயிராவிட்டாலும்) தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டருக்குத் திருப்திகரமாயிருக்கும்படி போதுமான காலம் விடவேண்டும். 22 வது பிரிவினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கும் விஷயத்திலே, ஒரு முழு தினத்துக்கு விடுமுறையில்லாமல் தொடர்ச்சியாய்ப் பதினன்கு தினம் எந்த நபரையும் வேலைசெய்ய விடக்கூடாது.
6. ஸிமென்ட் செய்யும் தொழிற்சாலைகள்.	சகலமான வேலையும்	22	
7. பீர் (beer) செய்யும் ப்ரூவெரி (brewery) என்னும் தொழிற்சாலைகள்.	அடுப்பை பற்றவைப்பதிலும் பீருக்குரிய ஏனங்களையும் பீப்பாய்களையும் சோதிப்பதிலும் அமர்ந்திருக்கும் நபர்களின் வேலை.		
8. மின்சாரம் உற்பத்திசெய்யும் ஸ்டேஷன்கள்.	எட்டுமணி நேர முறைகளில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் ஆள்களின் வேலை.	21, 22, 28.	28-வது பிரிவினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கும் விஷயத்திலே, விசேஷ சந்தர்ப்பங்களில் தவிர மற்றப்படி, யாதொரு தொழிற்சாலையில் எந்த நபராகிலும் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கு அதிகமாய் எவ்வளவு காலத்துக்கு வேலையில் அமர்த்திக் கொள்ளப்படுகிறாரோ அந்தக் காலமானது-ஏதாவதொரு தினத்தில் வேலை செய்யும் மணி நேரம் பன்னிரண்டு மணி நேரத்துக்கு மேற்படும்படி செய்யக்கூடியதாயிருக்கக்கூடாது. மேலும், மூன்று வாரத்தில் ஒரு தரத்துக்கு மேற்பட்டு யாதொரு நபரை மேலேகண்டபடி நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கு அதிகமாய் வேலையில் அமர்த்திக்கொள்ளக்கூடாது. ஷை விசேஷ சந்தர்ப்பங்களைக்குறித்த விவரங்களை இன்ஸ்பெக்டருக்கு உடனே தெரிவிக்கவேண்டும்.
9. தோல் பதனிடும் சாலைகள்.	(a) சகல நபர்களும் செய்யும் வேலை.	21	போஜனத்துக்காக (குறிப்பிடப்பட்ட ஒரு கால அளவாயிராவிட்டாலும்) போதுமான ஓய்வு காலம் கொடுக்கவேண்டும்.
	(b) நாட்டுமுறைகளை அனுசரித்துப் பதனிடுவதில் அமர்ந்திருக்கும் சகல நபர்களின் வேலை.	22	ஒரு முழு தினத்துக்கு விடுமுறை யில்லாமல் தொடர்ச்சியாய்ப் பதினன்கு தினம் எந்த நபரையும் வேலை செய்யவிடக்கூடாது.
	(c) க்ரோம் டானிங் (tanning) என்னும் முறைப்படி பதனிடுவதில் அமர்ந்திருக்கும் நபர்களின் வேலை.	22	(1) ஷை ஷை (2) க்ரோம் டானிங் என்னும் முறைப்படி பதனிடும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் மொத்த நபர்களில் மூன்றில் ஒரு பங்கு நபர்களுக்கு மாத்திரமே இந்த நிவாரணை பிரயோகப்படும்.

IV-ம் ந. விளம்பரம்.

இதனுடன் சேர்த்திருக்கும் ஷெட்யூலில் கண்டுள்ள வகுப்புகளைச் சேர்ந்த தொழிற்சாலைகள் முக்கியாவசியமானவைகளாய் ஒவ்வொரு நாளும் செய்யப்படவேண்டியவைகளாகவோ சர்ப்பரா செய்யப்படவேண்டியவைகளாகவோவுள்ள வஸ்துக்களைப் பொது ஜனங்களுக்கு சர்ப்பரா செய்கின்றனவென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்குத் திருப்திகரமாய் ருஜூ செய்யப்பட்டிருக்கிறபடியால்,

பிற்பட்டு திருத்தப்பட்டபடிக்குள்ள (1911-ம் வருஷத்து 12-வது ஆக்டாகிய) இந்துதேசத்து தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம் வருஷத்திய ஆக்ட் 30-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (d) அடையாளமிட்ட பகுதியின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - ஒரு முழு தினத்துக்கு விடுமுறை இல்லாமல் தொடர்ச்சியாய்ப் பதினன்கு தினம் எந்த நபரையும் வேலை செய்யவிடக்கூடாதென்னும் திட்டத்துக்கு உட்பட்டு, ஷை ஆக்ட் 22-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளினின்றும் மேலேகண்ட வகுப்புகளைச் சேர்ந்த தொழிற்சாலைகளை இதனால் களிகூர்ந்து நிவாரணை செய்கிறார்கள்.

ஷெட்யூல்.

1. ஐஸ் செய்யும் தொழிற்சாலைகள்.
2. ஸோடா வாட்டர் தயார்செய்யும் தொழிற்சாலைகள்.
3. தண்ணீரைப் பம்ப் அடித்துச் செலுத்தும் ஸ்டேஷன்கள்.

V-ம் ந. விளம்பரம்.

இதனுடன் சேர்த்திருக்கும் ஷெட்யூலில் கண்டுள்ள வகுப்பைச் சேர்ந்த தொழிற்சாலைகளில், வியாபாரத்தின் அவசரங்களை அனுசரித்தாகிலும் அதன் தன்மையை அனுசரித்தாகிலும் செய்யப்படும் வேலையை குறித்த பருவங்களிலன்றி மற்றப்படி செய்யமுடியாதென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்குத் திருப்திகரமாய் ருஜு செய்யப்பட்டிருக்கிறபடியால்,

பிற்பட்டு திருத்தப்பட்டபடிக்குள்ள (1911-ம் வருஷத்து 12-வது ஆக்டாகிய) இந்துதேசத்து தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம்வருஷத்திய ஆக்ட் 30-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில்கண்ட (e) அடையாளமிட்ட பகுதியின் (1) குறிப்பிட்ட உட்பகுதியின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - ஒரு முழு தினத்துக்கு விடுமுறையில்லாமல் தொடர்ச்சியாய்ப் பதினன்கு தினம் எந்த நபரையும் வேலை செய்யவிடக்கூடாதென்னும் திட்டத்துக்கு உட்பட்டு மேலேகண்ட வகுப்புகளைச் சேர்ந்த தொழிற்சாலைகளை ஷை ஆக்ட் 22-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளினின்றும் இதனுல் விலக்கி நிவாரணை செய்கிறுர்கள்.

ஷெட்யூல்.

1. ஏலக்காய் தயார்செய்யும் தொழிற்சாலைகள்.
2. இஞ்சி ஷை. ஷை. ஷை.
3. மிளகு ஷை. ஷை. ஷை.
4. எட்டிக்கொட்டைஷை. ஷை. ஷை.
5. மஞ்சள் ஷை. ஷை. ஷை.
6. காபிகொட்டையை உலர்த்தி பக்குவப்படுத்தும் வளவுகள்.

VI-ம் ந. விளம்பரம்.

பிற்பட்டு திருத்தப்பட்டபடிக்குள்ள (1911-ம் வருஷத்து 12-வது ஆக்டாகிய) இந்துதேசத்து தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம்வருஷத்திய ஆக்ட் 32-A பிரிவைச் சேர்ந்த (a) அடையாளமிட்ட பகுதியின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - சகல தொழிற்சாலைகளிலும் யாதொரு என்ஜின் அறையிலாவது கொப்பரை வீட்டிலாவது வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் சகல புருஷர்களின் விஷயத்திலும் அந்த தொழிற்சாலைகளை, அடியிற்கண்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஷை ஆக்ட் 22-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளினின்றும் இதனுல் விலக்கி நிவாரணை செய்கிறுர்கள்; ஷை திட்டங்கள் எவையென்றுல் :—

(1) லேபர் கம்மிஷனரால் நிஷ்கரிஷை செய்யப்படும் குறித்த ஒரு சங்கியையுள்ள நபர்களின் விஷயத்தில் மாத்திரமே இந்த நிவாரணை செய்துகொடுக்க அனுமதி கொடுக்கப்படும். இந்த நிவாரணையினுல் பலன் அடைய விரும்பும் தொழிற்சாலைகளின் மானேஜர்கள் அல்லது கையாளுகிறவர்கள் முறையே தங்கள் தங்கள் தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டர்கள் மூலமாய் லேபர் கம்மிஷனருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்.

(2) வேலை நடந்துகொண்டிருக்கும்போது யந்திரங்களை ஓட்டுவதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது.

(3) ஒரு முழு தினத்துக்கு விடுமுறையில்லாமல் தொடர்ச்சியாய்ப் பதினன்கு தினம் எந்த நபரையும் வேலை செய்யவிடக்கூடாது.

VII-ம் ந. விளம்பரம்.

பிற்பட்டு திருத்தப்பட்டபடிக்குள்ள (1911-ம் வருஷத்து 12-வது ஆக்டாகிய) இந்துதேசத்து தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம்வருஷத்திய ஆக்ட் 32-A பிரிவைச் சேர்ந்த (b) அடையாளமிட்ட பகுதியின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - மீன்களை உப்பிட்டு உலர்த்தும் முறைகளிலும் மீன்களை டப்பிகளில் அடைக்கும் முறைகளிலும் அமர்ந்திருக்கும் நபர்களை, இதில் கீழே கண்டிருக்கும் திட்டங்களுக்கு உட்பட்டு, ஷை ஆக்ட் 24-வது பிரிவின் (a) குறிப்பிட்ட பகுதியில் கண்ட நிபந்தனைகளினின்றும் இதனுல் விலக்கி நிவாரணை செய்கிறுர்கள் :—

நிவாரணை செய்வது சம்பந்தமான திட்டங்கள்.

(1) காலையில் ஐந்தரை மணிக்கு முன்பாவது மாலையில் ஏழு மணிக்குப் பிறகாவது எந்த ஸ்திரீயையும், எதாகிலும் ஒரு வாரத்தில் மூன்று தினங்களுக்கு மேற்பட்டு வேலையில் அமர்த்திக்கொள்ளக்கூடாது. ஸ்திரீகளை அந்தப்படி வேலையில் அமர்த்திக்கொள்ளக்கூடிய தினங்களின் சங்கியையானது வருஷத்தில் ஐம்பதுக்கு மேற்படக்கூடாது.

(2) எந்த ஸ்திரீயையும் இரவு 11 மணிக்குப் பிறகு வேலையில் அமர்த்திக்கொள்ளக்கூடாது.

(3) வேலை செய்யும் காலம் யாதொரு தினத்தில் இரவு 7 மணிக்குப் பிறகு முடிந்தால் அதற்கும், அடுத்த தினம் வேலை செய்யும் காலம் புதிதாய் ஆரம்பிப்பதற்கும் இடையில் வேலையில்லாமல் இளைப்பாறக்கூடிய காலம் ஒன்பது மணி நேரமாவது இருக்கவேண்டும்.

VIII-ம் ந. விளம்பரம்.

யாதொரு வகுப்பைச் சேர்ந்த தொழிற்சாலைகள் தேயிலைத் தோட்டங்களில் இருப்பவைகளாகவும் அந்தத் தோட்டங்களின் காரியத்துக்காகவே உபயோகிக்கப்படுபவைகளாகவும் இருந்தால், அந்த தொழிற்சாலைகளில் வியாபாரத்தின் அவசரங்களை அனுசரித்தாகிலும் அதன் தன்மையை அனுசரித்தாகிலும் செய்யப்படும் வேலையானது பிரகிருதியிலுள்ள சக்திகள் ஒழுங்கீனமாய் இயங்குவதைப் பொறுத்திருக்கும் காலங்களிலன்றி மற்றப்படி செய்யமுடியாதென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்குத் திருப்திகரமாய் ருஜு செய்யப்பட்டிருக்கிறபடியால்,

பிற்பட்டு திருத்தப்பட்டபடிக்குள்ள (1911-ம் ௵த்து 12-வது ஆக்டாகிய) இந்துதேசத்து தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம்௵த்திய ஆக்ட் 30-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (e) அடையாளமிட்ட பகுதியின் (ii) குறிப்பிட்ட உட்பகுதியின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்-மேலேகண்ட வகுப்பைச் சேர்ந்த தொழிற்சாலைகளை ஷை ஆக்ட் 26-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளினின்றும் இதனால் கழிகூர்ந்து நிவாரணை செய்கிறார்கள்.

IX-ம் ந. விளம்பரம்.

1926-ம்௵ ஜூன்௴ 1௳வரையில் திருத்தப்பட்டபடிக்குள்ள (1911-ம்௵த்து 12-வது ஆக்டாகிய) இந்துதேசத்து தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம்௵த்திய ஆக்ட் 32-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - தேயிலைத்தோட்டங்களில் உள்ளவைகளாய் அவைகளின் காரியத்துக்காகவே உபயோகிக்கப்படும் சகல தொழிற்சாலைகளையும் அடியிற்கண்ட திட்டங்களுக்கு உட்பட்டு 21-வது, 22-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளினின்றும் இதனால் கழிகூர்ந்து நிவாரணை செய்கிறார்கள் :—

(1) 21-வது பிரிவினின்றும் நிவாரணை செய்யப்படும் விஷயத்திலே,—இந்த நிவாரணை புருஷர்களாயும் வயதுவந்தவர்களாயுமுள்ள வேலையாள்களின் விஷயத்தில் மாத்திரமே பிரயோகப்படும்—போஜனத்துக்காக (நிஷ்க்ரியையான ஒரு கால அளவாயிராவிட்டாலும்) லேபர் கம்மிஷனருக்குத் திருப்திகரமாயிருக்கும்படி போதுமான காலம் விடவேண்டும்.

(2) 22-வது பிரிவினின்றும் நிவாரணை செய்யப்படும் விஷயத்திலே—

(a) ஒரு முழு தினத்துக்கு விடுமுறையில்லாமல் தொடர்ச்சியாய்ப் பதினான்கு தினம் எந்த நபரையும் வேலை செய்யவிடக்கூடாது ; மேலும்,

(b) யாதொரு விடுமுறை தினம் கொடுப்பதாக அறிக்கையிட்டிருந்து, அந்த தினத்தில் வேலை செய்யவேண்டிய அவசியம் இருப்பதாகப் பிற்பட்டுத் தெரியவருகிற விஷயங்களிலே, மானேஜரானவர் - அறிக்கையிடப்பட்ட விடுமுறை தினத்தில் தொழிற்சாலையிலே வேலை நடத்தப்படுகிறதென்று தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டருக்கு ஷை தினத்தில் சங்கதி தெரிவிக்கவேண்டும். அம்மாதிரியே, மானேஜரானவர்-முந்தியே அறிக்கையிடப்பட்டிராத யாதொரு தினத்தில் விடுமுறை தினம் கொடுக்கும்பட்சத்தில், அது சங்கதியையும் தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும் ; வரப்போகிற ஒரு ஞாயிற்றுக்கிழமையில் வேலைசெய்ய மானேஜர் உத்தேசித்து ஷை விடுமுறை தினம் அந்த ஞாயிற்றுக்கிழமைக்குப் பர்த்தியாக வைத்துக்கொள்ளப்படவேண்டுமென்னும் நோக்கம் இருந்தால், அப்பிரகாரமே தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டருக்குச் சங்கதி தெரிவிக்கவேண்டும்.

X-ம் ந. விளம்பரம்.

பிற்பட்டு திருத்தப்பட்டபடிக்குள்ள (1911-ம் ௵த்து 12-வது ஆக்டாகிய) இந்துதேசத்து தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம் ௵த்திய ஆக்ட் 30-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - இதனுடன் சேர்த்திருக்கும் ஷெட்யூலின் (1) குறிப்பிட்ட கலத்தில் கண்ட வகுப்பைச் சேர்ந்த தொழிற்சாலைகளை, அதன் (4) குறிப்பிட்ட கலத்தில் கண்ட திட்டங்களுக்கு உட்பட்டு, (3) குறிப்பிட்ட கலத்தில் கண்ட கால அளவுக்கு (2) குறிப்பிட்ட கலத்தில் கண்ட ஷை ஆக்டின் பிரிவுகளில் கண்டிருக்கும் நிபந்தனைகளினின்றும் இதனால் கழிகூர்ந்து நிவாரணை செய்கிறார்கள் :—

ஷெட்யூல்.

இன்ன வகுப்பைச் சேர்ந்த தொழிற்சாலைகள் நிவாரணை செய்யப்பட்டிருக்கின்றனவென்பது. (1)	இன்ன நிபந்தனையினின்றும் நிவாரணை செய்து கொடுத்திருக்கிறதென்பது. (2)	இன்ன கால அளவுக்கு நிவாரணை செய்திருக்கிறதென்பது. (3)	இன்ன திட்டங்களுக்கு உட்பட்டு நிவாரணை செய்திருக்கிறதென்பது. (4)
1. தேயிலைத் தோட்டங்களில் இருப்பவைகளும் அவைகளின் காரியங்களுக்காகவே உபயோகிக்கப்படுபவைகளுமான தொழிற்சாலைகள்.	27-வது, 28-வது பிரிவுகள்.	மே, ஜூன், ஸெப்டெம்பர், அக்டோபர், நவம்பர், டிஸெம்பர்.	(1) தினம் ஒன்றுக்குப் பதினொரு மணி நேரத்துக்கு மேற்பட்டு யாதொரு நபரை வேலை செய்யவிடும் தினங்களின் சங்கியையானது - 3-ம் கலத்தில் குறிப்பிட்டிருக்கும் மாதங்களில் எந்த ஒரு மாதத்திலாகிலும் பத்துக்கு மேற்படக்கூடாது.
2. காபி கொட்டையை உலர்த்தி பக்குவப்படுத்தும் தொழிற்சாலைகள்.	ஷை.	ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே.	(2) விசேஷ சந்தர்ப்பங்களில் தவிர மற்றப்படி, யாதொரு தொழிற்சாலையில் எந்த நபராகிலும் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கு அதிகமாய் எவ்வளவு காலத்துக்கு வேலையில் அமர்த்திக்கொள்ளப்படுகிறாரோ அந்தக் காலமானது - ஏதாவதொரு தினத்தில் வேலை செய்யும் மணிநேரம் பன்னிரண்டு மணிநேரத்துக்கு மேற்படும்படி செய்யக்கூடியதாயிருக்கக்கூடாது. மேலும், அது எந்த விஷயத்திலும் ஏதாவதொரு வாரத்தில் வேலை செய்யும் மணிநேரம் அறுபத்தாறு மணிக்கு மேற்படும்படி செய்யக்கூடியதாயிருக்கக்கூடாது. ஷை விசேஷ சந்தர்ப்பங்களைக்குறித்த விவரங்களை இன்ஸ்பெக்டருக்கு உடனே தெரிவிக்கவேண்டும்.

நெ. 229.—திருத்தப்பட்டபடிக்குள்ள இந்து தேசத்து தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம் ௵த்திய ஆக்ட் 37-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படியும் 37-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (f) அடையாளமிட்ட பகுதியின்படியும் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - 1923-ம் ௵த்து தொழிற்சாலைகளைக் குறித்த (திருத்தப்பட்ட) விதிகளைச் சேர்ந்த 23-வது, 59-வது, 66-A விதிகளில் அடியில் கண்ட திருத்தங்கள் செய்ய உத்தேசிக்கிறார்கள். அந்த திருத்தங்களினால் வெகுசாய் பாதிக்கப்படக்கூடிய சகல நபர்களுக்கும் தெரியும்பொருட்டு அவை ௸ ஆக்ட் 39-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கிறபடி பிரசித்தம் செய்யப்படுகின்றன. மேலும், ௸ மசோதா 1928-ம் ௵ நவம்பர்மீ 30௳ யன்றைக்காவது அதற்குப் பிறகாவது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்று அந்த ஆக்ட் 39-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி இதனால் அறிக்கையிடப்படுகிறது. மேலேகண்ட திருத்தங்கள் விஷயமாய்ச் செய்யப்படும் எவையேனும் ஆட்சேபனைகளையாவது தெரிவிக்கப்படும் எவையேனும் அபிப்பிராயக்குறிப்புகளையாவது ௸ தேதிக்குமுன் லேபர் கம்மிஷனருக்கு அனுப்ப வேண்டும்.

திருத்தங்கள்.

இப்போதுள்ள 23-வது பிரிவுக்குப் **பர்த்தியாக** அடியிற்கண்டதை **அமைத்துக்கொள்ளவும் :—**

"23. (1) தொழிற்சாலையின் எந்த அறையிலாவது யாதொரு காலத்தில வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் ஒவ்வொரு நபருக்காகவும் 36 சதுர அடியுள்ள அடித்தரையும்,

(i) யந்திர சக்தியாவது மின்சார சக்தியாவது உபயோகிக்கப்படாத பட்சத்தில், குறைந்தது 500 கன அடி விஸ்தீர்ணமுள்ள சுவாசிப்பதற்கான இடமும்,

(ii) யந்திர சக்தியாவது மின்சார சக்தியாவது உபயோகிக்கப்படும்பட்சத்தில், குறைந்தது 700 கன அடி விஸ்தீர்ணமுள்ள சுவாசிப்பதற்கான இடமும்

ஏற்படுத்தவேண்டும் :

ஆனால், தொழிற்சாலைகளின் பிரதான இன்ஸ்பெக்டருடைய மேல்விசாரணைக்கு உட்பட்டு, இன்ஸ்பெக்டரானவர் யாதொரு அறையில் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் நபர்களின் தேகாரோக்கியத்தைக் கிரமமாய்க் கவனித்து அதற்கு எவ்வித பாதகமும் இல்லாமல் இந்த விதியில் கண்ட திட்டங்களை அனுசரிக்கும் விஷயத்தில் கண்டிதக் குறைவாயிருக்கலாமென்று தாம் அபிப்பிராயப்படும் பட்சத்தில், அவசியமாயிருக்கக்கூடிய அளவுக்கு அந்தப்படி கண்டிதக் குறைவாயிருக்கலாம். அதற்குள்ள நியாயங்களை அவர் எழுதிவைக்க வேண்டும்.

(2) நபர்கள் கிரமமாய் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படும் தொழிற்சாலையின் ஒவ்வொரு அறையையும் பற்றிய விவரங்களை H நமூனாவில் பதிவு செய்யவேண்டும் ; இதை இன்ஸ்பெக்டர் கேட்கும்போது அவருக்குக் காட்டவேண்டும்."

இப்போதுள்ள 59-வது விதிக்குப் **பர்த்தியாக** அடியிற்கண்டதை **அமைத்துக்கொள்ளவும் :—**

"59. 21-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும், போஜனத்துக்காக (நிஷ்கரிஷையான கால அளவாயிராவிட்டாலும்) இன்ஸ்பெக்டருக்குத் திருப்திகரமாகப் போதுமான காலம் விடவேண்டும் ; மேலும், 22-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும், ஒரு முழு தினத்துக்கு விடுமுறை யில்லாமல் தொடர்ச்சியாய்ப் பதினான்கு தினம் எந்த நபரையும் வேலை செய்யவிடக்கூடாது."

இப்போதுள்ள 66-A விதிக்குப் **பர்த்தியாக** அடியிற்கண்டதை **அமைத்துக்கொள்ளவும் :—**

"66-A. யாதொரு தொழிற்சாலையில் அவசரமாயுள்ள மராமத்து சம்பந்தமான வேலைகள் நடந்தேறுவது காரணமாக, 21-வது, 22-வது, 27-வது, 28-வது பிரிவுகள் எல்லாவற்றிலுமாவது அவைகளில் எதிலாவது கண்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரிப்பது சாத்தியமாயிராவிட்டால், அவசரமாய்ச் செய்யும் மராமத்துகளின் தன்மையையும் அந்த மராமத்துகள் முடிவதற்குச் சுமார் இவ்வளவு காலம் ஆகக்கூடுமென்பதையும் சுருக்கமாகக் கண்டு வேலையைத் தொடங்கின இருபத்தினான்கு மணிநேரத்துக்குள் தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டருக்கு எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பவேண்டும். அப்படிப்பட்ட கால அளவில் எந்த நபரையும் எதாவது ஒரு தினத்தில் பதினெட்டு மணிநேரத்துக்கு மேற்பட்டாகிலும், தொடர்ச்சியாய் மூன்று தினங்களுக்கு மேற்பட்டு தினம் ஒன்றுக்குப் பதினெட்டு மணிநேரமாகிலும், ஏழு தினங்கள் கொண்ட எந்தக் கால அளவிலாவது எண்பது மணிநேரத்துக்கு மேற்பட்டாகிலும் வேலையில் அமர்த்திக்கொள்ளக்கூடாது."

எ. மாக்ஜி. லி. டம்போ,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.